## 49. என்னை நினைப்பதற்கு நான்

### பல்லவி

என்னை நினைப்பதற்கு எம்மாத்திரம்
நோக்கி பார்ப்பதற்கு எம்மாத்திரம்

### அனுபல்லவி

*யாக்கோபிலே சிறுபூச்சி நானே*
*இஸ்ரவேலிலே சிறுகூட்டம் நானே*

### சரணங்கள்

1. நோவாவை கண்ட நல்தேவனே
   அவனின்மேல் கிருபை வைத்தீர்
   அழிவுக்கு விலக்கி மீட்டு எடுத்தீர்
   பேழைக்குள் பத்திரமாக காத்துகொண்டீர்
   - என்னை நினைப்பதற்கு

2. லோத்தை கண்ட நல்தேவனே - அவனின்
   குடும்பத்தின்மேல் கிருபை வைத்தீர்
   அக்கினிக்கு தப்புவித்தீர்
   குடும்பமாக வெளியேற்றினீர்
   - என்னை நினைப்பதற்கு

3. இஸ்ரவேலரின் பெருமூச்சியை
   எகிப்தில் கண்ட நல்தேவனே
   இரட்சகன் மோசேவை அனுப்பி வைத்தீர்
   அடிமைதனத்திலிருந்து காப்பாற்றினீர்
   - என்னை நினைப்பதற்கு